*அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்குள் உள்ளடக்கப்படாதபட்டதாரி பயிலுனர்கள் 03 பேர் இந்த திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றுகின்றனர் என்பதுடன் தற்போதைய ஊழியர் எண்ணிக்கை நிரலில் (1137) அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 6.2 **.நிறுவனத்தின் செயல் திறனுக்கான மனித வள பற்றாக்குறை அல்லது மேலதிகம் தாக்கம் செலுத்தும் முறை

திணைக்களத்தில் தற்போது காணப்படும் மனித வள பற்றாக்குறையானது நிறுவனத்தின் செயல்திறனிற்கு எதிர்மறை விளைவுகள் ஏற்படுவதனை தடுக்குமுகமாக சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

- மனித உழைப்பை குறைக்கும் வகையில்தேசிய அடையாள அட்டைகளை தயாரிப்பதற்காகஈடுபடுத்தப்படும் கணனி வலையமைப்பினை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- திணைக்கள உத்தியோகத்தர்களை மேலதிக நேர சேவைக்கு உட்படுத்துதல்.

அதன்படி, திணைக்களத்தில் தற்போது காணப்படும் ஊழியர் வெற்றிடங்கள்மேற்குறிப்பிட்ட முறையின் மூலம் முகாமை செய்யப்படுவதுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய அதிகாரிகளிடம் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றன.

## 6.3. மனித வள அபிவிருத்தி

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித ் திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் கால வரையறை | முழு முதலீடு (ரூ.000) (உள்நாட்டு) | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு * |
|---|---|---|---|---|---|---|
| 1. | SDFL நிறுவனத்தின் மூலம் நிகழ்நிலை முறைமையின் ஊடாக நடாத்தப்படுகின்ற அரச கேள்வி நடைமுறை செயற்பாடுகள் தொடர்பான ஒருநாள் பயிற்சி செயலமர்வு | 2 | 01 நாள் | 7,000.00 | உள்நாடு | பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களுக்குரிய துறைகளின் உத்தியோகத்தர்களுடைய செயற்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிறுவனத்தின் முழு செயற்பாடுகளின் வினைத்திறனை உயர்த்துவதற்கு பங்களிப்பு கிடைத்துள்ளது. |
| 2. | SDFL நிறுவனத்தின் மூலம் நிகழ்நிலை முறைமையின் ஊடாக நடாத்தப்படுகின்ற அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப்பிரமாணம் தொடர்பான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு | 2 | 04 நாட்கள் | 14,000.00 | உள்நாடு | பயிற்சி வேலைத்திட்டத்திற்குரிய துறைகளின் உத்தியோகத்தர்களுடைய செயற்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| 3. | SDFL நிறுவனத்தின் மூலம் நிகழ்நிலை முறைமையின் ஊடாக நடாத்தப்பட்ட சொத்து/ உபகரணங்கள் நிலையான சொத்துக்கள் கொண்டுநடாத்துதல், பராமரித்தல் தொடர்பான ஒருநாள் பயிற்சி செயலமர்வு | 1 | 01 நாட்கள் | 3,500.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 4. | கொழும்பு பல்கலைகழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆங்கில டிப்ளோமா பாடநெறியின் இறுதி கட்டம். | 1 | 40 நாட்கள் | 40,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 5. | பெயர்வழிக் கோவையினை வினைத்திறனுடன் நடாத்திச் செல்லல் தொடர்பான பயிற்சி செயலமர்வு | 2 | 01 நாட்கள் | 8,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 6. | இருப்பு நிர்வாகம், சிறந்த ஒழுங்குபடுத்தல் மற்றும் வழங்கல் வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை பாடநெறி | 2 | 05 நாட்கள் | 30,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7.** | நிறுவன கனிஷ்ட ஊழியர்களுக்காக உரிய கடமைகளின் மதிப்பு மற்றும் கௌரவம் தொடர்பான பயிற்சி செயலமர்வு | 3 | 01 நாட்கள் | 12,000.00 | உள்நாடு | பொது மக்கள் தொடர்பாடலின் போது பயிற்சி பெறுபவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வரவேற்றல் மரியாதையுடன் நடாத்துதல் போன்ற நேர்மறையான எண்ண விருத்தி செயற்பாடுகள் ஏற்படுதல். |
| **8.** | பயனுறுதி தொடர்பான டிப்ளோமா பாடநெறி | 1 | 01 வருடம் | 72,000.00 | உள்நாடு | திணைக்களத்தில் அனைத்து பிரிவுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையாகும் வண்ணம் பயனுறுதி எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான நவீனமயப்படுத்தல்களை மேற்கொள்வதற்கான அறிவினைப் பெற்றுக்கொடுத்தல். |
| **9.** | உற்பத்தி உதவியாளர் மற்றும் ஆவண உதவியாளர்களுக்குரிய இரண்டாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்துவதற்குரிய முன்னோடி பரீட்சை நடவடிக்கைகளுக்கு திட்டமிடுவதற்காக மதிப்பிடப்பட்ட தொகையில் 50% னை செலுத்துதல். | 19 | - | 34,720.00 | உள்நாடு | திணைக்களப்படுத்தப்பட்ட நியமனங்களுடைய உத்தியோகத்தர்களுடைய சேவை நிலைப்பாட்டிற்குரிய அறிவின் ஊடாக வினைத்திறனை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை வழங்குதல். |
| **10.** | சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை / அலுவலகத்தில் நன்னடத்தையுடன் நடந்துகொள்ளல் தொடர்பான பயிற்சி செயலமர்வு | 2 | 02 நாட்கள் | 17,000.00 | உள்நாடு | சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு ஒழுக்கத்துடன் மற்றும் மரியாதையுடன் நடந்துகொள்வதனை ஊக்குவித்து பயிற்றுவித்தல். |
| **11.** | சேவை ஆரம்ப பயிற்சி (இடமாற்றம் பெற்றவர்கள் மற்றும் புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு) | 58 | 05 நாட்கள் | - | உள்நாடு | திணைக்களத்தின் தகவல் வலையமைப்பு தொடர்பாக அறிவுறுத்துதல் மற்றும் திணைக்களத்தின் கடமைகள் மற்றும் விடயப்பரப்பு தொடர்பாக நிறுவன கலாச்சாரம் தொடர்பான முன்னோடியான தெளிவூட்டலை புதியவர்களுக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12. | General Office Administration on E-Code பாடநெறி | 2 | 03 நாட்கள் | 10,000.00 | உள்நாடு | பயிற்சி நிகழ்ச்சிதிட்டத்திற்குரிய துறைகளின் உத்தியோகத்தர்களுடைய செயற்திறன் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி நிறுவனத்தின் மொத்த செயற்பாடுகளும் பயனுறுதிவாய்ந்த வகையில் உயர்த்திக் கொள்வதற்கான பங்களிப்பு கிடைத்துள்ளது. |
| 13. | Principals of Internal Auditing Procedures of Public Sector | 2 | 02 நாட்கள் | 14,000.00 | உள்நாடு | உள்ளக கணக்காய்வு தொடர்பாக பெற்றுக்கொண்ட அறிவினை உரிய துறைகளின் உத்தியோகத்தர்களுடைய வினைத்திறனை அதிகரித்துக்கொள்வதற்காக வழகாட்டுதலாக அமைந்தமை. |
| 14. | தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமானம் தொடர்பான பயிற்சி பாடநெறி | 7 | 02 நாட்கள் | 49,000.00 | உள்நாடு | பயிற்சி வேலைத்திட்டத்திற்குரிய துறைகளின் உத்தியோகத்தர்களுடைய வினைத்திறன் உயர்வடைந்துள்ளது. |
| 15. | அடிப்படை ஒழுக்காற்று விசாரணை பயிற்சி பாடநெறி | 29 | 02 நாட்கள் | 203,000.00 | உள்நாடு | ஒழுக்காறு தொடர்பாக தேவையான அறிவினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் மனித வளத்தினை பூரணத்துவமடையச் செய்தல் |
| 16. | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப்பிரமானம் தொடர்பான பயிற்சி பாடநெறி | 2 | 02 நாட்கள் | 20,000.00 | உள்நாடு | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய துறைசார்ந்த உத்தியோகத்தர்களின் வினைத்திறன் உயர்வடைந்துள்ளது. |
| 17. | பெயர்வழிக் கோவையினை வினைத்திறனுடன் நடாத்திச் செல்வது தொடர்பான பயிற்சி பாடநெறி | 9 | 01 நாட்கள் | 45,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 18. | அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி பாடநெறி | 7 | 01 நாள் | 35,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 19. | வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு தொடர்பான பயிற்சி பாடநெறி | 4 | 03 நாட்கள் | 60,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 20. | Improving the work place productivity using ICT | 4 | 03 நாட்கள் | 20,000.00 | உள்நாடு | திணைக்களத்தின் வினைத்திறனை உயர்த்துதல் எவ்வாறு என்பது தொடர்பாக தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | Effective online communication & use of Technology | 8 | 01 நாள் | 30,000.00 | உள்நாடு | கொவிட் தொற்று நிலைமை போன்ற சந்தர்ப்பங்களில் கடமைகளை தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொள்வதற்காக இணையத்தள த்தினை பயன்படுத்தி மேற்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாக அறிவுறுத்தலினை பெற்றுக்கொள்ளுதல |
| 22. | கோவைப்படுத்தல் தொடர்பான பயிற்சி பாடநெறி | 7 | 02 நாட்கள் | 56,000.00 | உள்நாடு | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களின் செயற்திறன் உயர்த்தப்பட்டுள்ளது. |
| 23. | Introduction to letter writing | 4 | 03 நாட்கள் | 8,000.00 | உள்நாடு | மேலுள்ளவாறு |
| 24. | அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடைய மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுடைய தொழில் விருத்தி பயிற்சி பாடநெறி | 21 | 02 நாட்கள் | 147,000.00 | உள்நாடு | திணைக்கள உத்தியோகத்தர்களில் அதிகமானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அபிவருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுதல |
| 25. | அரச கேள்வி நடைமுறை தொடர்பான பாடநெறி | 1 | 02 நாட்கள் | 7,000.00 | உள்நாடு | அரச கொள்கைகளுக்கமைவாக முறையான கேள்வி நடைமுறைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் |
| 26. | முகாமைத்துவம் தொடர்பான முதுமானிப் பட்ட பாடநெறி | 1 | 01 வருடம் | 110,000.00 | உள்நாடு | சிறந்த முகாமைத்துவத்திற்குத் தேவையான அறிவினை முகாமைத்துவத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிப் போக்கினை பூரணத்துவமாக்குதல். |

*** நிறுவனமொன்றில் மேற்கொள்ள எதிர்ப்பார்த்துள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம்**

நிறுவனமொன்றில் மேற்கொள்ள எதிர்ப்பார்த்துள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவுள்ள நிறுவனமொன்றில் மனித வளத்தினை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயனுள்ளவாறும் பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக பயிற்சி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது முக்கியமாகும். இங்கு சேவை வழங்குனரின் அறிவினை விருத்தி (கற்றல்) செய்துகொள்ள முடிவதுடன், இந்த அறிவு விருத்தியின் ஊடாக உண்மையாகவே இடம்பெறுவது யாதெனில் தொழிலில் வெற்றியினை அடைந்துகொள்வதற்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் நேர்மறையான மனோபாவங்கள் உருவாக்கப்படுவதாகும்.

அதன்படி சேவை வழங்குனரின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு விருத்தியடைவதன் ஊடாக ஊழியத்தின் திறமை நேரடியாக வளர்ச்சியடைகின்றது. திறமை அதிகரிக்கும் போது ஊழியரின் சுயமதிப்பு, தன்னம்பிக்கை மற்றும் சேவைத் திருப்தி அதிகரிப்பதுடன் அதனூடாக ஊழியர் நல்லபிப்பிராயம் அதிகரிக்கின்றது. அதேபோல், இந்த ஒவ்வொரு பண்புகளின் காரணமாக சேவை வழங்குனரின் செயல்திறன் அதிகரிக்கின்றது. இதன்படி, நிறுவனம் தனது சேவைபெறுநரின் பயிற்சித் தேவையின் படி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்குதல் அல்லது அவ்வாறான பயிற்சி வேலைத்திட்டங்களை உருவாக்கியுள்ள நிறுவனங்களிடம் சேவைபெறுநரை அனுப்புகின்றமை போன்றவை மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கிடையில் காணப்படுகின்ற சிறப்பான அறிவு மற்றும் திறன்களை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதுடன், மொத்த செயற்பாடுகளின் மூலம் மிகப் பயனுறுதி வாய்ந்த மற்றும் அறிவுபூர்வமான மனித வளத்தினை உருவாக்கிகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# அத்தியாயம் 07

# இணக்க அறிக்கை

| இலக்கம் | பயன்படுத்தப்படும் தேவைப்பாடுகள் | இணக்கத்தின் தன்மை (இணங்குகின்றது / இணங்கவில்லை) | இணங்கவில்லையாயின் அதற்கான சுருக்கமான விளக்கம் | எதிர்காலத்தில் இணங்காதிருப்பதனை தடுப்பதற்காக முன்வைக்கப்படும் துல்லியமான தீர்மானங்கள்/ நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | **கீழே குறிப்பிடப்படடுள்ள நிதிக் கூற்று/கணக்குகள் உரிய திகதியில் முன்வைக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்று | இணக்கமானது | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வியாபாரம் மற்றும் உற்பத்தி முற்பனக் கணக்கு (வியாபார முற்பனக் கணக்கு) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | விஷேச முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | வேறு | - | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (நி.பி.445)** | | | |
| 2.1 | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 267/2018 படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதிகள்பதிவேடு/ ஆளுக்குரிய வேதனாதிகள் அட்டை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புகளும் (CIGAS) தயார்செய்யப்பட்டு குறித்த திகதியன்று திறைசேரிக்கு முன்வைத்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை ஏட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.8 | கையிருப்பு பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.9 | நட்டம் அல்லது இழப்புகள் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது | | |
| 2.11 | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேட்டினை (GA- N20) இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது | | |
| **3** | **நிதிக் கட்டுப்பட்டிற்காகக் கடமைகளைக் கையளித்தல் (நி.பி.135)** | | | |
| 3.1 | நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நிறுவனத்திற்குள் கையளிப்புச் செய்திருந்தமை | இணக்கமானது | | |
| 3.2 | நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை கையளித்தல் தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவுறுத்தல் | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையானவர்கள் ஊடாக அனுமதிக்கக் கூடியவாறு அதிகாரத்தைக் கையளித்திருத்தல் | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய இலக்கம் 171/2004 உடைய அரச கணக்கு சுற்றறிக்கைக்கு ஏற்ப, அரச ஊதியங்கள் மென்பொருள் பெகேஜினை பயன்படுத்தும் போதுகணக்காளர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல் | இணக்கமானது | | |
| **4** | **வருடாந்த மதிப்பீட்டினை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயல் திட்டத்தினை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கேள்வி நடைமுறை திட்டத்தினை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை தயாரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டினை தயார்செய்து தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு (NBD) முன்வைத்திருத்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த நிதிப் பாய்ச்சற் கூற்றினை குறித்த திகதியில் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **5** | **கணக்காய்வு விசாரணை** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் அதிபதியினால் குறிக்கப்பட்ட திகதியில், அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் விடையளித்திருத்தல் | இணக்கமானது | | |
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 ற்கு ஏற்ப, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் உசாவியதன் பின்னர், உள்ளகக் கணக்குப் பரிசோதனை நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் விடையளித்திருத்தல் | இணக்கமானது | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப அட்டவணையின் பிரகாரம், அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல் | இணக்கமானது | | |
| 6.4 | நிதிப் பிரமானம் 134(3) படி, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல் | இணக்கமானது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1 – 2019 படி, குறைந்த பட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களாவது உரிய வருடத்திற்குள் நடாத்தியிருத்தல | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017இலக்கத்தையுடைய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 வது அத்தியாயத்தின் படி சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் உபயோகம் தொடர்பான தகவல்களை கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு முன்வைத்தல் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 13 வது அத்தியாயத்தின் படி, அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை ஒருங்கிணைப்பு செய்வதற்குரிய தகுதியான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் தொடர்பான தகவல் கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு முன்வைத்தல் | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 படி, இருப்பு சுற்றாய்வுகள் நடாத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதிக்கு கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல் | இணக்கமானது | | |
| 8.4 | வருடாந்த இருப்பு சுற்றாய்வில் கண்டறியப்படும் மேலதிகம், குறைவு மற்றும் ஏனைய பரிந்துரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மேற்கொண்டிருத்தல் | இணக்கமானது | | |
| 8.5 | உபயோகிக்க முடியாத பொருட்களை அகற்றுவதற்கு நி.பி.772ன் படி செயற்படுதல் | இணக்கமானது | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | இருக்கின்றவாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டப் பதிவேடு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வு அதிபதிக்கு முன்வைத்தல் | இணக்கமானது | | |
| 9.2 | உபயோகப்படாத வாகனங்களை 06 மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியினுள் அகற்றியிருத்தல் | இணக்கமானது | | |
| 9.3 | வாகனத்தின் லொக் புத்தகத்தை பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாக நி.பி.103, 104, 109 மற்றும் 110 படி நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30ஆம் இலக்கத்தையுடைய அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம்,வாகனங்களில் எரிபொருள் தகனமடைவதனை மீள பரிசீலனை செய்தல் | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகைக்கான கால வரையறையின் பின்னர் , குத்தகை வாகனங்களின் லொக் புத்தகங்களின் முழுமையான உரிமையினை கையகப்படுத்திக்கொள்ளல். | இணக்கமானது | | |
| **10** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | குறிப்பிட்ட திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவை முன்வைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் இருந்து முன் கொண்டு வருகின்ற செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளினால் வெளிப்படுத்தப்படும் மற்றும் இணங்கச் செய்ய வேண்டிய மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த மீதிகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாடுகளின் பயன்கள்** | | | |
| 11.1 | வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளில் அவற்றின் எல்லையினை விஞ்சாதவாறு செலவுகளை மேற்கொள்ளுதல் | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94(1) ன் படி, வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் மிஞ்சுகின்ற நிதி ஏற்பாட்டு எல்லை மீறப்படாதவாறு பொறுப்பாக மாற்றுதல் | இணக்கமானது | | |
| **12** | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைக்கு உடன்படுதல் | இணக்கமானது | | |
| 12.2 | கடன் இருப்பு மீதி தொடர்பான கால மீளாய்வொன்றை மேற்கொண்டிருத்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலதிக காலமாக காணப்படுகின்ற நிலுவையாக உள்ள கடன் மீதிகளை தீர்த்தல் | இணங்கவில்லை | தீர்க்கப்படாத கடன் மீதிகள் மற்றும் அதற்குரிய காரணங்கள்: 01.திருமதி.எம்.பீ.லெச்சுமி – அலுவலக உதவியாளர் ரூ.164,470.00 இறந்துபோனமை. (அவரின் மரண பணிக்கொடையிலிருந்து கடனை அறவிட்டுக்கொள்வதற்காக ஊழியரின் கணவர் விருப்பம் தெரிவித்துள்ளார். அதற்கேற்ப மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.)<br><br>02.திரு.டீ.எம்.ஆர்.திசாநாயக்க - அலுவலக உதவியாளர் ரூ.50,083.00 – சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். (இந்த உத்தியோகத்தரின் கடனை அறவிட்டுக்கொள்வது தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 1689/18 DMR ன் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. 2022.06.03 ஆம் திகதி அழைப்பானை மீண்டும் விடுக்கப்பட்டுள்ளது.)<br><br>03.திரு.ஜே.எம்.புத்தி – அபிவிருத்தி உத்தியோகத்தர III ரூ.6,250.00 (விழா முற்பணம்) – சேவையை விட்டு விலகியமை.( இந்தப் பணத்தினை செலுத்துாறு உத்தியோகத்தருக்கு பல முறை அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>04.திரு.ஜீ.எச்.டீ.ஆர்.நந்தசிரி – அலுவலக ஊழியர் ரூ.168,920.00 – சேவையில் இருந்து விலகுவதற்காக விண்ணப்பித்துள்ளார். தற்போது சேவைக்கு வருகை தருவதில்லை. (இந்த உத்தியோகத்தரின் கடனை அறவிட்டுக் கொள்வதற்கு | இவை கட்டுப்படுத்த முடியாததொன்றாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.) | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலங்கடந்த வைப்பு தொடர்பாக நி.பி.571 ன் படி செயற்படுதல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்பிற்குரிய கட்டுப்பாட்டு கணக்கினை இற்றைப்படுத்தி கொண்டு நடாத்துதல் | இணக்கமானது | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு வருட இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 ன் பிரகாரம் வழங்கப்பட்ட மறுவழங்கல்களுக்குரிய உப கட்டுநிதி, அச் செயற்பாடு பூர்த்தியாக்கப்பட்டவுடனேயே ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படல் வேண்டும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 ன் பிகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லையினை மீறாதவாறு மறுவழங்கலுக்குரிய உப கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 14.4 | கட்டுநிதி கணக்கு மீதி, திறைசேரியின் புத்தகங்களுடன் இணக்கமடைதல் | இணக்கமானது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய பிரமாணங்களுக்கு அமைய, சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீள கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானங்கள் வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி.176 ன் படி வருமான அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்ஜ வக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதிக்கப்பட்ட பணிக்குழாமின் எல்லைக்குள் பணிக் குழாம் எண்ணிக்கையினை கொண்டு நடாத்துதல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.2 | பணிக் குழாமின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 ன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்குமுன்வைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| **17** | பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல் | | | |
| 17.1 | தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் பிரமாணங்களின் படி தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் பதிவேட்டினை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லுதல் | இணக்கமானது | | |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்களை அங்குள்ள இணையத்தளத்தின் ஊடாக அல்லது வேறு முறையூடாக கண்டறிந்து நிறுவனம் தொடர்பாக பொதுமக்களின் பாராட்டு/குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதற்கு வசதிகள் செய்து வைத்தல் | இணக்கமானது | | |
| 17.3 | தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்தின் 08 வது மற்றும் 10வது பந்திகளின் படி வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கொருமுறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| **18** | **பிரஜைகள் நியதிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | 05/2008 மற்றும் 05/2008(1) இலக்கத்தையுடைய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் படி பிரஜைகள்/ சேவைபெறுநர்கள் நியதிச் சட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல் | இணக்கமானது | | |
| 18.2 | அந்த சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம்,பிரஜைகள்/ சேவைபெறுநர்கள் நியதிச் சட்டத்தை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடுதலுக்காக நிறுவனத்தினால் நடைமுறையொன்றை தயாரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **19** | மனித வள திட்டத்தை உருவாக்குதல் | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 ன் இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனித வள திட்டத்தினை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | பணிக்குழாமினரின் ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் வருடத்திற்கு குறைந்த பட்சம் 12 மணித்தியாளத்திற்கும் குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பம் மேற்குறிப்பிட்ட மனித வள திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் | இணக்கமானது | | |
| 19.3 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 01ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணிக்குழாமினருக்குரிய செயற்திறன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 19.4 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் படி மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், திறன் விருத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திறன்கள் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பொறுப்புக்களை கையளித்து சிரேஷ்ட உத்தயோகத்தர் ஒருவரைநியமித்தல். | இணக்கமானது | | |
| **20** | **கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல்** | | | |
| 20.1 | கடந்த வருடத்திற்காக கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்தல் | இணக்கமானது | | |

# இணைப்பு 01

ஜேஎல்ஓ/ஈ/டிஆர்பீ/எப்எஸ்/2021/02 2022 மே 30

ஆணையாளர் நாயகம்
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை.

.....

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களைக் குறிப்பிடுதல் மற்றும் அவதானிப்புக்கள் ஆகியன இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்படவேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை குறிப்பிட்ட காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதி நிலைமைக் கூற்றுக்களின் 2021 ஆம் ஆண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில்கணக்காய்வுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) ஏற்பநான் கணக்காய்வினை மேற்கொண்டேன்.நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகஎனது பொறுப்புகள் மற்றும் கணக்காய்வாளரின் பொறுப்புகள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்தவங்களிற்கு இணங்க மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மைத்தன்மையினையும் நியாயத்தினையும் பிரதிபலிக்கக்கூடியவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாகஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளக நிர்வாகத்தினை நிர்ணயித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு தம்முடைய வருமானங்கள், செலவினங்கள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்கு பயனுறுதிவாய்ந்த உள்ளக நிர்வாக கட்டமைப்பொன்றை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாககணக்கீட்டு உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்துவதுடன்அந்தக் கட்டமைப்பின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொண்டுஅதற்கேற்றவாறு கட்டமைப்பை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுகள், மோசடி அல்லது தவறு காரணமாகஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில்பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில்அதனை எல்லாவேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் திர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறு காரணமாகநிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டன. மோசடியானது தவறான கூட்டிணைவு, போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்களினை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக பயன்படுத்திய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தப்பாட்டுடனும் நியாயத்தன்மையுடனும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதனை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின்ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இணங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், முக்கியமான உள்ளக நிர்வாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)ஈ பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன்இணங்குகின்றது என்பதும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னுடைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றுகைக்கூற்று

#### 1.6.1.1 வருமான கிடைப்பனவுகள்

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினுடைய 2021 வருடத்தின்மொத்த வருமானம்ரூ.198,886,160என்பதுடன் 2021 ஆம் வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கையின் படி ரூ.198,885,410 என குறிப்பிடப்பட்டிருந்தது.

.

#### 1.6.1.2 மீண்டெழும் செலவுகள்

நிதிச் செயலாற்றுகைக் கூற்றின்படி வேறுஅமைச்சுக்கள்/திணைக்களங்களினால் இந்த திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூ.609,218,645 தொகையென்றாலும் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புகளின் படி அது ரூ.609,514,326 வாக ரூ.295,681 தொகை வேறுபாட்டுடன் அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 1.6.2. காசுப்பாய்ச்சற் கூற்று

#### 1.6.2.1 வழிநடத்தற் செயயற்பாடுகளினால் ஏற்பட்ட காசுப்பாய்ச்சற் கூற்று

காசுப்பாய்ச்சற் கூற்றில் வழிநடத்தற் செயற்பாடுகளினால் குறிப்பிடப்பட்ட நிவாரணம் மற்றும் மாற்றுதல்களின் பெறுமதி ரூ.3,946,489 தொகையென்றாலும் ஏசீஎம்2 (II) படிவத்தில் காசுப்புத்தகத்திற்கு ஏற்ப அது ரூ.3,882,466 தொகையெனக் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தினால் காசுப் பாய்ச்சற் கூற்றில் அத்தொகை ரூ.64,023 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.6.3 கணக்காய்விற்கு சாட்சிகள் இல்லாமை

2021 ஆம் வருடத்தில் கணக்குகள் தயாரிக்கும்போது ரூ.18,339,607 பெறுமதியுடைய97 ஜர்னல் குறிப்புகள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும்ரூ.15,792,164 பெறுமதியுடைய 81 ஜர்னல் வவுச்சர்கள் கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதியஅரச நிதிக் கொள்கைச் சுற்றறிக்கை இக்கம் 01/2015ல் 07 வது பந்தியின் படி இந்த திணைக்களத்தினால் அரையாண்டிற்குரிய வருமான அறிக்கை உரிய கால எல்லை முடிவடைந்த திகதி தொடக்கம் 15 நாட்களுக்குள் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கவேண்டியிருந்தாலும் அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செலவு முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வு வருடத்திற்கான செலவுகளின் மொத்த நிகர நிதி ஏற்பாடு ரூ.1,476,150,000 என்பதுடன் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புகளின் படி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ.1,261,459,299 தொகையென்பதால் மொத்த மீதி ரூ.214,690,701 அதாவது நிகர நிதி ஏற்பாட்டில் நூற்றுக்கு 15 வீதமாகும்.

(ஆ) மீளாய்வு வருடத்தில் மூலதனச் செலவிற்காகஒதுக்கப்பட்ட நிகர பெறுமதியான ரூ.210,950,000 தொகையில் ரூ.89,436,526 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தமையால் மூலதன நிதி ஏற்பாட்டின் மீதி ரூ.121,513,474 அதாவதுநிகர நிதி ஏற்பாட்டில் நூற்றுக்கு 58 வீதமாகும். செலவு விடய இலக்கம் 2509 ன் கீழ் வேறு மூலதன செலவுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூ.180,000,000 தொகையில் ரூ.118,919,524 தொகையானது எஞ்சியமை இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

(இ) மீளாய்வு வருடத்தில் 5 செலவு விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் நூற்றுக்கு 65 வீதம் தொடக்கம் நூற்றிற்கு 92 வீதம் வரையான சேமிப்பு காணப்பட்டது.

(ஈ) 2021 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அச்சிடப்பட்ட 26,489 ற்குரிய அடையாள அட்டைகள் பிழைகளுடையதென இனங்காணப்பட்டதுடன் அதற்காக ரூ.1,669,286 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு எழுதல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன.

(அ) தனியார் நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அட்டைகள் டென்டருக்காக ரூ.56,492,100 தொகை தீர்க்கப்படவேண்டியிருந்தது. அது 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு வருடங்களிலும் பொறுப்புகள் என்று கணக்கு வைக்கப்படாது கடப்பாடு என்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரைக்கும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எழுதுகருவிகள் கொள்வனவு செய்வதற்காக 227-01-01-1201 எனும் செலவு விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த நிகர நிதி ஏற்பாட்டினை விஞ்சி ரூ.1,347,116விற்கான கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

**2.4 சட்டம், ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்களுக்கு ஏற்ப இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன.

| **சட்டம், ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்களுக்கானஉட்படுத்தல்கள்** | **இணங்காமை** |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம்<br>(i) நி.பி.135(5) | திணைக்களத்தினால் வருமானம் தொடர்பாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நி.பி.565(4) | வைப்புகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சுருக்க கையொப்பம் இடப்படவேண்டியிருந்தாலும் திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படுகின்ற பொது வைப்பு லெஜரில் கொடுப்பனவிற்கு அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |

**3. மனித வள முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் 1475 ஆக காணப்பட்டதுடன் உண்மையாக காணப்படும் ஆளணியினர் 1278 என்பதால் வெற்றிடம் மற்றும் மேலதிகமான ஆளணியினர் முறையே 200 மற்றும் 03 ஆகும்.

(ஆ) அறிக்கையிடப்பட்ட திகதியன்று சட்ட உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 06 பதவிகளுக்கான முழு அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் 25 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் காணப்பட்டது.

எம்.சோமதிலக்க
பிரதி கணக்காய்வாளர்,
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.